# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 22/2023 | **CNR No.** | : | TNKI13-000070-2021 |
| **Name** | : | சுபாஷ் | **Father's Name** | : | மெய்யப்ப கவுண்டர் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW2 |
| **Age** | : | 55 | **Village** | : | தருமபுரி |
| **Taluk** | : | தருமபுரி | **District** | : | தருமபுரி |
| **Start Time** | : | 12:35 PM | **End Time** | : | 12:55 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 18.03.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) எனது வீட்டிற்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 30 கி.மீ இருக்கும். வழக்கு சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. ஆதியில் வழக்கு சொத்து யார் பெயரில் இருந்தது என்றால் பழனியப்பன் பெயரில் இருந்தது. பழனியப்பனை எப்படி தெரியும் என்றால் வாங்கும் பொழுது உடன் இருந்தேன். எனக்கு வாதி உறவினறா என்றால் அவரது தங்கையின் கணவர் ஆவேன். வழக்கு சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் எனது தங்கை இந்திராகாந்தி பெயரில் உள்ளது. எப்போது எனது தங்கை பெயரில் மாற்றப்பட்டது என்றால் சென்ற ஆண்டு மாற்றப்பட்டது. எவ்வளவு நிலம் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் **2 ஏக்கர் 63 சென்ட்** எழுதி வைத்துள்ளார்கள். நான் எழுதும் பொழுது உடன் இருந்தேனா என்றால் இல்லை, அவ்வாறு இறுக்கையில் எனக்கு எப்படி தெரிய வந்தது என்றால் எனது தங்கை சொன்னார். நான் தாக்கல்

செய்துள்ள முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் கணபதி எனது தங்கை பெயரில் எழுதி வைத்துள்ள விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதனால் சொல்லவில்லை என்றால் சாட்சி அமைதியாக இருக்கிறார்.

(2) **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தை இந்த வழக்கில் ஆஜரான வழக்கறிஞர் தான் தயாரித்துள்ளார் என்றும் எனது முதல்விசாரணை பிரமாணபத்திரம் அவர் தான் தயார் செய்தார் என்றும் **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.1** ஆவணத்தில் நான் சாட்சியம் அளித்துள்ளது போல் வாய்மொழியாக கிரையம் பெற்றதாக சொல்லும் எந்த நிலத்தையும் தானம் செய்யவில்லை என்றால் சரியல்ல. **சர்வே எண்.296/2 ஏ** புல வரைபடத்தில் என்ன அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. கிரையம் பெற்றபோது அளந்தார்களா என்றால் 1996 ல் அளந்தார்கள், யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நானும் எனது அப்பாவும் இருந்தோம். அவ்வாறு அளக்கும் பொழுது பச்சியம்மாள், பழனியப்பன் மற்றும் எத்துராஜ் ஆகியோர்கள் உடன் இருந்தார்களா என்றால் இல்லை. 63 சென்ட் ஏரி நீர் பிடிப்பு என்பதால் தான் 2 ஏக்கர் வாதி கணபதிக்கும் 1.70 ஏக்கர் பிரதிவாதிக்கும் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல, அவ்வாறு தான் ஆவணங்கள் இருந்தது அதன் படி கொடுத்துள்ளார்கள். எனது தங்கைக்கு தானம் கொடுத்த அன்றைய தேதியிலேயே சுவாதீனம் கொடுத்துவிட்டதாக இருக்கும் நிலையில் இன்றைய தேதியில் வாதி சுவாதீனத்தில் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவர் கணவர் என்பதால் அனுபவித்து வருகிறார். வாதி

உரிமையாளராக தற்போது இல்லாததால் இந்த வழக்கை நடத்த அறுகதை அற்றவர் என்றால் சரியல்ல.

(3) மாரியப்பன் கிரையம் வாங்கிய **1 ஏக்கர் 70 செண்ட்** நிலத்தில் வாதிக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரிதான். வாதி உடைய உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(4) **குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai